அவசியம் இருந்தால் திருத்தங்கள் கொடுத்திருக்க முடியும். அது பற்றி ஆட்சேபிப்பதற்கு அவசியம் இருந்திருந்தால் ஆட்சேபித்திருக்க முடியும். ஆனால் காலாவதியான பிறகு இன்றுதான் அது இந்தச் சபைக்கு வருகிறது. தபாலில் அனுப்பப்பட்டது சில தினங்களுக்கு முன்னர்; தபாலிலேயே இதுபற்றி சபாநாயகர் அவர்களுக்கும் அனுப்பி வைத்து விட்டேன். இன்று இது முக்கியமில்லாமலிருக்கலாம். ஆனால் இதன் மீது திருத்தங்கள் கொடுக்க வேண்டுமென்று அங்கத்தினர்கள் விரும்பினால் காலாவதியான பிறகு எப்படி திருத்தம் கொடுப்பது? அதனால் என்ன பயன் ஏற்படும்? அது, கெஸட்டில் போட்டவுடன் அமுலுக்கு வருவதாகும்; சபையில் வைத்த பிறகு அமுலுக்கு வருவதல்ல. கெஸட்டில் போட்டால் போதும். ஆகவே இலாகா ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். அந்த ஒழுங்கீனத்தைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஆனால் நான் அப்படிச் சொல்வது முறையல்ல என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதிகாரிகளின் அல்லது நிர்வாகத் தவறுகளுக்கு அமைச்சர்தான் பொறுப்பாளி—சட்டசபை சம்பிரதாயப்படி. அவர்களை கைவிடக் கூடாதுதான். அவர்கள் செய்யவில்லை என்று மறுப்பது சரியல்ல. அவர்கள் செய்தது தவறு என்றால் அப்படி இனிச் செய்யாது பார்த்துக் கொள்கிறோம் என்று பொறுப்பேற்றுக் கொள்வது சரியே தவிர அப்படி எடுத்துக் காட்டுவது சரியல்ல என்று சொல்வது முறையல்ல. ஆக, இதை உரிமைப் பிரச்னையாக எடுத்து மற்ற இலாகாக்கள் தவறு செய்யாமல் இருக்க இது ஒரு உதாரணமாக இருக்கவேண்டுமென்று சமர்பித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Does the Hon. Minister for Finance wish to say anything?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

MR. SPEAKER: We can take this up on the date on which the Labour Demand comes up before the House.

திரு. மீ. கலியாணசுந்தரம்: உரிமைப் பிரேரபனை அப்படியேயிருக்கட்டும். கனம் சபாநாயகர் அவர்கள் பரிசீலனை செய்யட்டும். அவசியம் என்று கருதினால் அபிப்பிராயம் கொடுக்கலாம்.

MR. SPEAKER: We shall consider it when we take up the Labour Demand.

III.—ADJOURMENT MOTION *RE*: POWER-CUT IN THE STATE.

MR. SPEAKER: I have received notice of an adjournment motion from the hon. Member Sri M. Kalyanasundaram for the purpose of discussing a matter of urgent public importance, viz., the situation arising out of the power-cut enforced all over the State resulting in partial closure of a number of factories subjecting a large number of industrial workers to lay-off and loss of earnings. I now call upon the hon. Member to state his case.

30th June 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம் : இம்மாதிரி ஒத்திவைப்புப் பிரேரேபணை மூலம்தான் முக்கியமான பிரச்னைகளை இச்சபை முன் கொண்டுவர முடியும். ஆகவேதான் இதைக் கொடுத்திருக்கிறேன். ஒத்தி வைத்து சர்க்காரைக் கண்டிக்கவேண்டுமென்பதல்ல. சர்க்காரை . . . . .

MR. SPEAKER : So the hon. Member is diluting ! (Laughter).

THE HON. SRI R. VENKATARAMAN : We hope there will be some rains.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சில தினங்களுக்கு முன்பு வரையில் மின்சார இலாகாவின் பொறுப்புள்ள அமைச்சர் அவர்கள், மின்சாரக் குழுவின் தலைவர், சீப் என்ஜினியர் எல்லோரும் உறுதி அளித்தார்கள், இந்த ஆண்டு மின்சார வெட்டு இராது என்று. திடீரென்று 50% குறைந்து விட்டதாக, பத்திரிகைகள் மூலம் அறிக்கைகள் வருகின்றன. எவ்வளவு நாட்கள் இது தொடர்ந்து நீடிக்கும்? உண்மை நிலை என்ன? மழை இல்லாததுதான் காரணமா? இவைகள் எல்லாம் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். பல தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன, தொழிலாளர்கள் வேலையில்லாதிருக்கின்றனர், சம்பள வெட்டு, இப்படியெல்லாம் இருப்பதால் உண்மையான விவரங்கள் என்ன என்று தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்றுதான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொடுத்திருக்கிறேன். விவரங்கள் என்னவென்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால் நன்றாகயிருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்று லேபர் அட்வைஸரிக் கூட்டம் நடந்தது. கனம் அங்கத்தினர், அதில் அங்கத்தினர். அவர்கள் அந்தக் கூட்டத்திலே விவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று பிரியப்பட்டார்கள். ஆகவே எலெக்ட்ரிஸிட்டி போர்ட் தலைவர் நேற்று பிற்பகல் 3 மணிக்கு வந்து நிலைமையை விளக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் வந்து விளக்கினார்கள். அவர்களால் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. கூடுமான வரையில் எல்லோருக்கும் விநியோகிப்பதற்கும், விநியோகம் குறைக்கப்பட்டிருப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறோம் என்று சொன்னார்கள். கடைசியில் மழை வருவதற்கு பிரார்த்தனைதான் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நிலைமை விளக்கப்பட்டது. ஆனால் இந்த மன்றத்திலே இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் 41-வது விதிப்படி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்று கேட்டால் அதை 2-ம் தேதி வரை பார்த்துக்கொண்டு 2-ம் தேதி நிலைமை என்னவென்று தெரிந்துகொண்டு 3-ம் தேதி அல்லது 4-ம் தேதி அந்த அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு யோசனை. சில தினங்களுக்கு முன் பத்திரிகையில் பார்த்தேன். கனம் நிதியமைச்சர் அவர்கள் குற்றாலத்திலோ என்னவோ ஆண்டவனை பிரார்த்தித்தவுடனேயே

இரவே மழை வந்தது என்று. அப்பேர்ப்பட்ட சக்தி அவர்களுக்கு இருக்குமேயானால் அந்த சக்தியை உபயோகித்து மழை பெய்யும்படி செய்ய முடியுமா 3-ந் தேதிக்குள்ளாக.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஆண்டவனைக் கூட பிரார்த்திக்கவில்லை. 'மழை நாளைக்கு வரும்' என்று சொன்னேன், வந்து விட்டது.

MR. SPEAKER : So, I think the hon. Member is not pressing his motion.

SRI M. KALYANASUNDARAM : I am not pressing the motion for adjournment. I shall raise the matter again under rule 41.

MR. SPEAKER : Next item is . . . .

SRI M. KALYANASUNDARAM : I have given notice of another privilege matter.

MR. SPEAKER : That has not been considered yet. We shall take it up next Monday.

SRI M. KALYANASUNDARAM : All right, Sir.

IV.—REVISED BUDGET FOR 1962–63—PRESENTATION.

MR. SPEAKER : The Hon. Finance Minister will now present the Budget for the year 1962–63.

கனம் திரு. எம். பக்தவத்சலம் :

சபாநாயகர் அவர்களே,

முன்னுரை

1962-63-ம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையை நான் இப்போது சமர்ப்பிக்கிறேன். நடப்பு ஆண்டுக்கான இடைக்கால " பட்ஜட் " சென்ற டிசம்பரில் பழைய சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் அரசாங்கம் செய்ய வேண்டிய செலவுக்காக மானிய அனுமதி பெறப்பட்டது கனம் அங்கத்தினர்கள் அனைவருக்கும் தெரியும். வரவு-செலவுப் போக்கில் இப்போது கிடைத்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் இடைக்கால பட்ஜட் திருத்தி யமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய " பட்ஜட் " இந்த அரசாங்கத்தின் கொள்கைகளையும் புதிய வேலைத் திட்டங்களையும் பிரதிபலிக்கிறது.*

2. இடைக்கால வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களையும் புதிய வரவு-செலவுத் திட்டப் புள்ளிவிவரங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், வருவாய் ரூ. 92.71 கோடியிலிருந்து ரூ. 106.50 கோடியாக உயர்ந்

---

* Vide pages 71—91 for appendix (Tamil).
Vide pages 92—142 for English version of Budget Speech. and appendices.